# இலங்கை

## தொடரும் வெகுஜனப் படுகொலை

## திசை திருப்ப சமாதான நாடகம்

இலங்கை பாசிச ஜெயவர்த்தனேயின் வாரிசு பிரேமதாசா மீண்டும் சமாதானம் -போர் நிறுத்தம் - பேச்சுவார்த்தை என்ற நாடகத்தைத் துவங்கியுள்ளார். தென்னிலங்கையில் இராணுவமும் இரகசியக் கூலிப்படைகளும் நடத்திவரும் பாசிச பயங்கரவாதப் படுகொலைகளையும், ஈழத்தில் இந்திய இராணுவம் மேற்கொண்டு வரும் புலிகளைத் தேடி அழிக்கும் தீவிர வேட்டையையும் மூடிமறைத்து, மக்கள் கவனத்தைத் திசை திருப்புவதற்கான முயற்சிதான் இது

பஞ்சாபிலே போலீசு கொலைவெறியன் ரிபைரோ உருவாக்கியுள்ள இரகசியக் கொலைப்படை அனுபவத்தைக் கற்றுக் கொண்டு ''கருப்புப் பூனைகள்'', ''பச்சைப் புலிகள்'', ''மக்கள் புரட்சி செம்படை'' ஆகிய இரகசியக் கொலைப்படைகளைக் கூட்டியுள்ளது இலங்கை பாசிச கும்பல். தென்னிலங்கையில் அரசுக்கு எதிராகவும், இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் ''கொரில்லாப் போர்'' நடத்திவரும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இளைஞர்களைக் கொன்று பயபீதியை உருவாக்குவதுதான் இப்படைகளின் பணி. இவர்கள் ஜே.வி.பி. ஆதரவாளர் என்று சந்தேகிக்கப்படும் சிங்கள இளைஞர்களைப் பிடித்து, பின்புறம் கைகளைக் கட்டி, நெற்றிப் பொட்டைத் துப்பாக்கியினால் துளைத்து தெருவோரங்களில் வீசி எறிகின்றனர். ஈக்கள் மொய்க்கும் அந்தப் பிணங்களில் ஒரு கயிறு கட்டிய சிறுகுறிப்பு: ''ஜே.வி.பி.த் தலைவன் ரோகன விஜயவீராவைப் பின்பற்றியதற்கான தண்டனை''. இன்னும் பல இளைஞர்களின் பிணங்கள் கழுத்திலே 'டயர்' சுற்றிப் பாதி எரித்த நிலையில் தெருவோரங்களில் கிடக்கின்றன.

இலங்கைப் பொதுத் தேர்தலை ஒட்டிப் பல நாட்கள் ஜே.வி.பி. நடத்திய பொது வேலைநிறுத்தத்தின் போதிருந்தே இம்மாதிரியான படுகொலைகள் பெரும் எண்ணிக்கையில் நடக்கின்றன. ஜே.வி.பி.யினரை அழிப்பது மட்டுமல்ல, மக்களிடையே பயங்கர பயபீதியையும் விதைக்கிறது பாசிச ஆளும் கும்பல். ஆனால் இவை எதுவும் ஜே.வி.பி.யின் தனிநபர் அழித்தொழிப்பு கொரில்லா போரைத் தடுத்து நிறுத்திவிடவில்லை. அரசியல் கட்சிப் பிரமுகர்கள் -தொண்டர்களும், அரசு அதிகாரிகள் -இராணுவத்தினரும் தொடர்ந்து அழித்தொழிக்கப்படுகின்றனர். துரோகிகள், எதிரி உளவாளிகள் விளக்குக் கம்பங்களிலே கட்டி சுட்டுக் கொல்லப்படுகின்றனர். இப்படி அரசு பயங்கரவாதப் படுகொலைகளும், ஜே.வி.பி. எதிர்த்தாக்குதல்களும் அதிகரித்து வருகின்றன. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் 3000 பேர் இவற்றுக்குப் பலியாகியுள்ளனர்.

பாசிச் பிரேமதாசா கனவு காண்பதைப் போல ஜே.வி.பி. அழிக்கப்பட்டுவிடவில்லை. மார்ச்சு 22ம் தேதி இலங்கை - இந்திய இராணுவப் படுகொலைகளுக்கு எதிராக ஒரு கண்டனப் பொது வேலைநிறுத்தம்; ஏப்ரல் 5ம் தேதி ஜே.வி.பி. 1971 ஆம் ஆண்டு பொது எழுச்சித் தியாகிகள் நினைவு நாளும் வெற்றிகரமாக நடத்தியது.

அதேபோல், 10,000 இந்தியப் படையினரைக் கொண்டு வவூனியா காடுகளில் புலிகளைத் தேடி அழிக்கும் முயற்சியிலும் இந்திய இராணுவம் தோல்வியுற்றுவிட்டது. புலிகளின் தலைமையகத்தைத் தேடும்படி வவூனியா காடுகளுக்குப் போன 90 கூர்க்காப் படையினர் பூண்டோடு அழிக்கப்பட்டனர். இந்திய இராணுவ முற்றுகையினால் கணிசமான இழப்புக்களைச் சந்தித்த போதும் புலிகளின் தலைமை முற்றுகையை உடைத்துக் கொண்டு தப்பிவிட்டது. ஆத்திரமுற்ற இந்திய இராணுவம் நூற்றுக்கணக்கான சிவிலியன் தமிழர்களைக் கொன்றது. இப்போது 3000 துருப்புக்களை ஏவி முல்லைத் தீவை முற்றுகையிட்டுள்ளது.

இந்திய - இலங்கை பாசிஸ்டுகள் மேற்கொண்டுள்ள இந்தப் படுகொலைகள் இலங்கை மக்களிடையே கடும் வெறுப்பு -எதிர்ப்பைத் தூண்டிவிட்டுள்ளது. எனவேதான் ஜே.வி.பி. கொடுத்த பொது வேலைநிறுத்த அறைகூவலுக்கு பெரும் ஆதரவு கிட்டியது; மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப சமாதான - போர்நிறுத்த -பொதுமன்னிப்பு நாடகமாடுகிறது பாசிச பிரேமதாசா கும்பல்.

ஆனால் அடுத்தடுத்து இராணு
தோல்விகளையும், இழப்புகளை
துவரும் இந்திய இராணுவம்
கௌரவப் பிரச்சினையாகக்
இதனால் மேலும் இலங்கைப்
ளில் பிரேமதாசா முன்முயற்சி
நடவடிக்கை எடுப்பதையும் இந்
பவில்லை. ஏற்றுக்கொள்ளாது
டும் உறுதிப்படுத்தும் வகை
தாசா அறிவித்த போர்நிறுத்
டுப்பட இந்திய இராணுவம் மறு
தனது கோரிக்கைக்கு மாறாக
இராணுவம் தனது மண்ணில்
தொடருகிறது. இருந்தபோதும்,
மதாசா அரசு அதை ஏற்றுக்கொ
முதலாவதாக இந்த போர்நிறு
னம் - பேச்சுவார்த்தை - பொது
ஆகியன ஒரு நாடகம்தான்! இரா
இந்திய இராணுவத்தை இந்
கத்தை எதிர்க்கும் நிலையில் அ
மூன்றாவதாக, இந்திய இரா
பதிலாக ஈழவிடுதலைப் போ
ஒடுக்குவதற்கு சிங்கள இரா
அனுப்புவதற்கு இயலாதவா
இயக்கம் ஆயுத பலம் பெற்று
வேதான் முன்பு இந்திய இரா
திருப்பி அனுப்பப் போவதாக
பிரேமதாசா இப்போது அது
றையின்றி நீடிப்பதைப் பகிர
ஆதரிக்கிறார்.

பிரேமதாசாவின் போர்நிறு
தானம் - பேச்சுவார்த்தைக்கான
முதலில் நிராகரித்த புலிகள் பி
சம்மதித்துள்ளனர். இதன்மூலம்
ஒரு தற்காலிகத் தீர்வைக் கூட
யாது என்ற போதும் அப்படி எது
விடக் கூடாது என்பதற்காகத்
ஆர்.எல்.எஃப். முதலிய தனது
ளைத் தூண்டிவிட்டு மத்திய அர
கூச்சலிடச் செய்கிறது. 'குடிமக்
டர் படை' என்ற கூலிப்படைக்
யும் ஆயுதமும் வழங்குவதைத்
தியுள்ளது.

ஆனால் இந்திய - இலங்
ஆளும் கும்பல்களிடையிலான
பாட்டைப் பயன்படுத்திக் கொ
வது தற்காலிக ஆதாயம் அடை
என்று விடுதலைப் போராளிகள்
அது வெறும் கனவுதான்! தே
ருக்கோ, விடுதலைப் புலிகளுக்
யல் ரீதியில் அதிகாரப்பகிர
கொடுப்பதற்கான தீர்வு எதுவு
டம் கிடையாது. மாறாக அவ
டோடு அழிப்பதற்கான
கொலைப்படையைத் திட்டமி
கியுள்ளார்கள். இந்தக் கூலி
வைத்து கொழும்பு, திரிகோ
யாழ்ப்பாணம் ஆகிய நகரங்
குண்டுகளை வைத்தும், கிராம
வெறித்தாக்குதல்கள் நடத்தியு
தமிழ் மக்களைப் படுகொலை
னர். ''தீவிரவாதிகள்'' மீதுபழி
இன மக்களிடையே பகைமை
மாக்கி வளர்க்கிறார்கள். ஆகவே
ளைத் தாக்கி எறிந்து போரிடுவ
வேறு வழியில்லை.

ஈழத்தில் ஆக்கிரமிப்புப் போர் படுகொலைகளைத் தொடர்ந்து ''வெற்றிகரமாக'' நடத்தி வருவதற்காக இந்தியத் துணைத் தளபதி கல்கத்துக்கு ''சர்வோத்தம் யுத்தம்'' விருது

